

# கிறிஸ்தவனும் மதுபானமும்

எழுதியவர் : டக் பேச்சுலர்

Copyright © 2002, 2020
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# கிறிஸ்தவனும் மதுபானமும்

எழுதியவர் : டக் பேச்சுலர்


இரண்டு எதிரெதிரான அணிகள் .......................................... 3
ஆல்கஹால் என்றால் என்ன? .............................................. 4
இரண்டு விதமான திராட்சரசம் - வேதத்தின் படி பேசுவது ... 6
குழப்பமான வசனங்கள் தெளிவுப்படுத்தப்படுகிறது ............ 7
மனம் விரும்புவதெதுவோ ..................................................... 9
கடைசி விருந்து பற்றி என்ன? ........................................... 12
இயேசு மதுபானப்பிரியராயிருந்தாரா? ................................. 14
மதுபானம் : அவமானத்தின் வேதாகம இடம் .................. 16
புளிக்கவைக்கப்பட்ட மதுபானம் கொண்டுவருவது ஐயோ .. 18
ஆரோக்கியம் சார்ந்த ஒரு விஷயம் .................................. 19
பூமியின் மிகக் கொடியப்பொருள் ........................................ 21
அன்பினால் ஒரு சிக்கல் ...................................................... 23
சோதனையை வரவேற்றல் ................................................... 25
கெடுக்கப்படும் சாட்சியங்கள் .............................................. 27
பெந்தெகொஸ்தே நாளில் மதுபானம் ................................ 29
வயிற்றிற்காக கொஞ்சம்? .................................................... 30
மற்ற மருத்துவப்பயன் .......................................................... 31
மிதமாகக் குடித்தல் ............................................................. 32
ஆசாரியர் மற்றும் ராஜாக்களின் ராஜ்யம் ...................... 34
சுருக்கவுரை ........................................................................ 37

## ஒரு ஆச்சரியமான உண்மை :

***மூன்று பாட்டில் பீர்பானம் குடித்த பிறகு சராசரி 13 சதவீதம் நினைவிழப்பு நிகழ்கிறது என பரிசோதனைகள் காட்டுகின்றன. பயிற்சி பெற்ற தட்டெழுத்தாளர்கள், சிறிதளவு ஆல்கஹால் அருந்திய பிறகு பரிசோதிக்கப்பட்டதில் அவர்களுடைய பிழை 40 சதவீதம் அதிகரித்தது. ஒரே ஒரு அவுன்ஸ் ஆல்கஹால் முடிவெடுக்கும் நேரத்தை 10 சதவீதம் அதிகரிக்கிறது; தசைகளின் செயல்பாட்டை 17 சதவீதம் தடைசெய்கிறது; கவனிக்கும் திறன் குறைவதால் 35 சதவீதம் பிழைகள் அதிகரிக்கிறது - பால் ஹார்வே.***

ஒரு கிறிஸ்தவன் மது அருந்துவதற்கு வேதாகம அனுமதி உண்டா? ஆம் என்றால் எவ்வளவு?

இந்த எதிர்மறையான பொருள் கிறிஸ்தவர்களிடையே உணர்ச்சி பூர்வமான கருத்துகளை எழுப்பியிருக்கிறது. ஏன்? தேவனுடைய வார்த்தை மவுனம் சாதிக்கிறதா அல்லது மதுபானத்தைக் குறித்து தெளிவற்று இருக்கிறதா?

மதுபானம் பற்றியும் தேவனுடைய அடியார்களுக்கு அதன் தொடர்பு பற்றியும் வேதாகமம் ஒருபோதும் தெளிவற்ற நிலைப்பாடு கொள்ளவில்லை என்பதை நான் சமர்ப்பிக்கிறேன். இந்தப் பொருள் பற்றிய கீழ்க்காணும் பகுப்பாய்வு நீங்களே வேதாகமத்தைச் சார்ந்த முடிவுகளை எடுக்க உதவி செய்யும் என நம்புகிறேன்.

# இரண்டு எதிரெதிரான அணிகள்

கிறிஸ்தவர்கள் மத்தியில், இந்த உணர்வு பூர்வ பொருள் பற்றி இரண்டுவித முக்கியமான கருத்துக்களைப் பெற்றிருக்கும் அணிகள் உள்ளன. இயேசுவே திராட்ச ரசம் பருகினார், அதனால் கிறிஸ்துவை பின்பற்றும் கிறிஸ்தவன் மட்டும் ஏன் தடை செய்யப்பட வேண்டும்? என முதல் குழுவினர் விவாதிக்கின்றனர். மற்றும் பொதுவாக, அவர்கள் மிதமான கொள்கை ஒன்றை சேர்க்கிறார்கள்; "ஆனாலும், அளவுக்கு அதிகமாக குடிக்கக் கூடாது"

வேறொரு நிலைப்பாடும் காணப்படுகிறது: மதுபானம் போதைக்கு அடிமையாக்கி அழிவுக்கு வித்திடும் என்பதால் எந்த உண்மையான கிறிஸ்தவனும் எந்த அளவும் மது அருந்துதல் கூடாது.

இந்த இரண்டு நேர் எதிரான மூலைகளுக்கு மத்தியில் எண்ணற்ற கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சுருக்கமான ஆய்வில் எல்லாவிதமான சாத்தியக் கூறுகளையும் நான் அலச முடியாமல் போகலாம், அதனால் வேதத்தையும் பொது அறிவையும் வைத்து முக்கியமான கோட்பாடுகளை பற்றிச் சொல்ல முயற்சிக்கிறேன்.

ஆரம்ப கட்டத்திலேயே சொல்லிவிடுகிறேன், உண்மையில், நிச்சயமாகவே நான் புளிப்பேற்றப்படாத அணியில் இருக்கிறேன்! இயேசுவின் திராட்சரசப் பயன்பாடு பற்றி வேதாகமம்

சொல்வது புளிப்பேற்றப்படாத திராட்சை சாறு என்பதை நான் நம்புகிறேன்.

ஆனால், மதுப்பிரியர்கள் இந்த புத்தகத்தை தள்ளி வைக்க முற்படுமுன் நான் சொல்லுவதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்பது உங்களுக்கு தேவையான ஒன்று, அடிக்கடி இரவு உணவுடன் மது அருந்தும் பழக்கத்தில் வளர்ந்தவன் - என்னுடைய பீர் பானத்தை நானே காய்ச்சி இருக்கிறேன் மற்றும் ஒருமுறை மதுவை நானே தயாரித்திருக்கிறேன். ஆனால் நான் மதுவுக்கு அடிமைப்படவில்லை; ஆதலால் என்னுடைய நிலைமை, நான் சுத்தமாகி நிதானமான, நிலைக்கு வெற்றிப்பெற்றிருக்கிறேன் என்கிற அதிக பிரசங்கித்தன முடிவினால் வந்ததில்லை.

## ஆல்கஹால் என்றால் என்ன?

ஒரு வரையறையிலிருந்து ஆரம்பிப்போம், ஆல்கஹால் என்றழைக்கப்படுவது அநேக விதமான கலவைகள் உள்ளன. ஆனாலும் எல்லாமே விஷத்தன்மை வாய்ந்தவை என்று சொல்வதில் தவறில்லை – மனித உடலுக்கு நச்சு சேர்ப்பவை. பீர், ஒய்ன் போன்ற பானங்களில் ஆல்கஹால் காணப்படுகிறது மற்றும் பிராந்தி என்பது எத்தனால் ($C_2H_5OH$) ஆகும். இது எளிதில் தீப்பற்றக்கூடியது. ஒருவித எரிப்புத்தன்மை வாய்ந்த சுவை கொண்டது மற்றும் ஒருவித தனி நாற்றம் கொண்டது.

இப்படிப்பட்ட ஆல்ஹகால் பானத்தை அருந்துவதால் என்ன நடக்கிறது? இரத்த ஓட்டத்தில் இந்த அடர்த்தி நிறைந்த எத்தனால் ஐந்து சதவீதம் அதிகமானால், சாதாரணமாக மரணம் நேரிடுகிறது.! ஆனால் எப்பொழுதாவது ஒருமுறை உபயோகப்படுத்துகிறவர்களுக்கும், உடனுக்குடன் நடத்தை மாறுகிறது, கண்பார்வை மங்குகிறது, மற்றும் கொஞ்சம் குடித்தாலும் மயக்கநிலை ஏற்படுகிறது.

இது சுவாரசியமாய் இருக்கிறதல்லவா? சட்டவிரோதமான ஹெராய்ன் போன்ற போதைப்பொருட்கள் இதே பாதிப்பை ஏற்படுத்துகின்றன, மற்றும் மாரிஜுவானா என்கின்ற போதை வஸ்தும் அதை பயன்படுத்துகிறவர்களுக்கு இப்படிப்பட்ட பாதிப்பை உண்டாக்குகிறது. இப்படிப்பட்ட போதை வஸ்துக்களை சமுதாயக் கூடுதல் நேரத்திலோ, படுக்குமுன் நரம்புகளை சாந்தப்படுத்துவதற்கோ பயன்படுத்தலாம் என்று அறிவிக்கும் கிறிஸ்தவ சபைகள் இருக்குமா என நான் சந்தேகிக்கிறேன், ஆல்கஹால் இந்த தவிர்க்க கூடிய போதைப்பொருட்களின் பட்டியலில் இடம் பெறக்கூடாது என்று சொல்லுவதற்கு ஏதாகிலும் காரணம் இருக்க முடியுமா?

# இரண்டு விதமான திராட்சரசம் - வேதத்தின் படி பேசுவது

“திராட்சரசம்” என்கின்ற வார்த்தை வேதாகமத்தில் சில இடங்களில் புதிய – அல்லது புத்தம்புதிய திராட்சை சாற்றை குறிக்கிறது; மற்ற இடங்களில் நாள்பட்ட அல்லது புளிப்பேற்றப்பட்ட ஆல்கஹால் போதையுடன் கூடிய மதுபானத்தைக் குறிக்கிறது. மொழி பெயர்ப்பாளர்கள் “திராட்சை சாறு” என்கின்ற பதத்தை பயன்படுத்தவே இல்லை. இந்த இரண்டையும் வேறுப்படுத்திக் காட்ட எபிரெய வார்த்தைகளில் இருவேறு பதங்களை பயன்படுத்துகிறார்கள். புதிய நொதிக்கப்படாத திராட்ச ரசத்தைக் குறிக்க ‘டிய்ரோஷ’ என்கின்ற வார்த்தையை பயன்படுத்தப்படுகிறது மற்றும் ‘யாயின்’ என்கின்ற வார்த்தை நொதிக்கப்பட்ட திராட்சரசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது; ஆனாலும் சில விதிவிலக்குகளும் காணப்படுகின்றன (**ஏசாயா 16:10**). ஆனாலும் புதிய ஏற்பாட்டில் நொதிக்கப்பட்ட மற்றும் புதிய திராட்ச ரசத்தை குறிக்க கிரேக்க பதம் ‘ஓய்நிஸ்’ என்கின்ற ஒரே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது ஒரு பிரச்சனையாக இருக்க முடியாது. சொல்லப்படும் சூழ்நிலையைப் புரிந்துக்கொண்டால் சரியான பொருள் வெளிப்படுவதைக் காணலாம். கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களில் சொல்லப்பட்டாலொழிய (**லூக்கா 5:37-39 - ல் சொல்லப்படுவது போல**) பழைய அல்லது புதிய திராட்ச ரசத்தை வேறுப்படுத்திக்காட்ட எப்படிப்பட்ட

சூழ்நிலையில் சொல்லப்படுகிறது என்பதை கவனித்தல் அவசியம்.

ஒரு சிறிய உதாரணம் **மாற்கு 2:22 –ல் வருகிறது. "ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கமாட்டான்: வார்த்துவைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப் போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்: புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்க வேண்டும் என்றார்."** புதிய ரசம் என்பது நொதிக்கப்படாத புதிய திராட்சை சாற்றைக் குறிக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இன்னமும், பழைய ஏற்பாட்டிலிருந்து, **ஏசாயா 65:8 – ல் நாம் வாசிப்பது, "கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் ஒரு திராட்சக்குலையில் இரசம் காணப்படும் போது அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டு..."** இந்த இரண்டு வசனங்களிலிருந்து ஒன்று தெளிவாகிறது, அது, புதிய ரசம் என்பது திராட்சைச் சாறு.

## குழப்பமான வசனங்கள் தெளிவுப்படுத்தப்படுகிறது

மொத்த வேதவசனங்களும் தெளிவாக, நிச்சயமாக மதுபானம் அருந்துவதற்கு எதிராகவே இருக்கின்றன, ஆனால் மனித இயல்பானது சந்தேகத்துக்குறிய வசனங்களில்

ஏதாவது ஒரு சிறிய "ஓட்டையை" கண்டுபிடித்து மது அருந்துதலை நியாயப்படுத்துகிறது.

இந்த நிலைப்பாட்டிற்கு கானா ஊர் கலியாணத்தில் இயேசு தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றிய சம்பவம் உதாரணமாக சொல்லப்படுகிறது. **"அந்த திராட்ச ரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்ச ரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து : எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்." (யோவான் 2:9, 10).** மது அருந்துவதை ஆதரிக்கிறவர்கள், இது ஆல்கஹால் கலந்த மதுவாகத்தான் இருக்க முடியும் - ஏனெனில், அது ஒரு திருமண நிகழ்ச்சி, எல்லா திருமண நிகழ்ச்சிகளிலும் இது இயல்புதானே – சரிதானே ? ஆனால் சற்றே பொறுத்திருந்து அதன் தாக்கங்கள் என்ன என்று கவனிப்போம். அங்கே ஆறு கற்சாடிகள் நிரப்பப்பட இருந்தன, ஒவ்வொறு ஜாடியும் 20 லிருந்து 30 காலன்கள் கொள்ளும், மொத்தத்தில் 180 காலன்கள் பானம்!

புதிய திருமணத்துக்கு வந்திருக்கும் அத்தனை விருந்தாளிகளும் குடித்துவிட்டு உதடுகளால் உளறி தடுமாறும் கால்களைப் பெற இயேசு 180 காலன்கள் அழிவுக்கு வழிநடத்தும் மது

பானத்தை செய்திருப்பார் என நாம் நம்ப முடியுமா? உண்மையில் அப்படி செய்திருந்தால் அவருடைய வார்த்தைக்கு எதிராகவே செயல்ப்பட்டிருக்க வேண்டும்! (**ஆபகூக் 2:15 லூக்கா 12:46 எபேசியர் 5:18**). இந்த வசனங்களை வேதாகமத்தின் எல்லா வசனங்களோடும் ஒப்பிட்டுப்பார்த்தால் இயேசு உண்டாக்கியது நொதிக்கப்படாத திராட்ச ரசமே என்கின்ற முடிவை நாம் நிச்சயமாகவே எடுப்போம் - மற்றும் பந்தி விசாரிப்புக்காரன் அதனுடைய நல்ல தரத்தைப் பற்றி மணமகனைப் பாராட்டுகிறான். (**யோவான் 2:4, 6, 10, மேலும் மாற்கு 1:24, 2 சாமுவேல் 16:10 வாசிக்கவும்**).

## மனம் விரும்புவதெதுவோ

இன்னமும் சில வசனங்கள், முதல் வாசிப்பிலே, நொதிக்கவைக்கப்பட்ட மதுவை சிறிதளவு எப்பொழுதாவது ஒருமுறை அருந்தினால் அது வேதாகம மன்னிப்பைப் பெறும் என நினைக்கத் தோன்றும், அடுத்து வரும் சில பகுதிகளில் சில வசனங்களைப் பார்ப்போம்; அவைகளில் உண்மையில் அப்படி ஒன்றும் சொல்லப்படவில்லையென்றாலும் நொதிக்கப்பட்ட மது அருந்துதல் மன்னிக்கப்படக் கூடியது என்பது போல மாற்றியமைத்துக் காட்டப்படுகிறது.

**“அங்கே உன் இஷ்டப்படி ஆடுமாடு, திராட்சரசம், மதுபானம் முதலான சகலத்தையும் பணம்கொடுத்து வாங்கி, உன் தேவனாகிய**

**கர்த்தருடைய சந்நிதியில், நீயும் உன் குடும்பத்தாரும் உன் வாசல்களில் இருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக.''** (**உபாகமம் 14:26**). ''மதுபானம்'' என்கின்ற பதம் ஷேக்கார் என்கின்ற வார்த்தையின் மொழிப்பெயர்ப்பு. ஷேக்கார் என்பது சாலமோனால் 'அமளிப்பண்ணும்' என்று கடிந்து கொள்ளப்படுகிறது (**நீதிமொழிகள் 20:1**). மற்றும் ஏசாயா ''சாராயத்தை (*ஷேக்கார்*) நாடி'' செல்பவர்களுக்கு ஐயோ என சொல்கிறார் (**ஏசாயா 5:11**). ஆசாரியர்களிடமிருந்தும் (**லேவியராகமம் 10:9-11**), நசரேயரிடமிருந்தும் (**எண்ணாகமம் 6:2-4 நியாயாதிபதிகள் 13:3-5**) மதுபானம் விலக்கி வைக்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க தேவன் எப்படி ஒரு இடத்தில் மதுபானத்தின் உபயோகத்தைக் கடிந்துக் கொண்டு வேறொரு இடத்தில் ஏற்றுக் கொள்ள முடியும்? யாயின் (மது) என்கின்ற வார்த்தை போல ஷேக்கார் என்பது மேலே சொன்னது போல ஆல்கஹால் பானத்தையோ அல்லது **ஏசாயா 24:9** – ல் காணப்படுவது போல இனிப்பான நொதிக்கப்படாத பானத்தையோ குறிக்கும் ஒரு பொதுவான சொல்லாக இருக்கிறது. ஷேக்கார் என்பது த பாப்புலர் **அண்டு கிரிட்டிக்கல் என்சைக்லோபீடியாவால் இவ்வாறு வரையறுக்கப்படுகிறது:** '' இனிப்பான திராட்சைச்சாறு அல்லது பாகு. ஷேக்கார் என்பது இனிப்பான, மிக இனிப்பான சர்க்கரை பானம் அல்லது பாகு, அதிலும் விஷேசமாக பேரீட்சை அல்லது பனைமரத்து சர்க்கரை அல்லது தேன்'' அல்லது

“புளிக்கவைக்கப்படாத நிலையில் இருக்கும் புதிய பேரீட்சை அல்லது பனைமரத்து பானம்.” உண்மையில் “சர்க்கரை” மற்றும் “சாறு” என்பவை ஷேக்கார் என்கின்ற வார்த்தையிலிருந்து வந்தவை. அதனால், ஷேக்கார் என்பது புதிய நொதிக்கப்படாத இனிப்பு பானத்தையோ அல்லது போதையூட்டும் பானத்தையோ குறிப்பிடுகிறதினால் அந்த வார்த்தையை சூழ்நிலைக்கேற்ப மொழிபெயர்க்க வேண்டும். போதையூட்டும், ஆரோக்கிய கேட்டை விளைவிக்கும், புத்தியை மழுங்கப்பண்ணும் போதை பானங்களை வாங்குவதற்கு தசமபாக பணத்தை பயன்படுத்த ஆண்டவர் ஊக்குவிப்பாரா? இதன் மூலமாக இந்த வசனம், இனிப்பான புதிய பனைச்சாறு அதனுடைய நொதிக்கப்படாத நிலையில் இருக்கும் பானத்தையே குறிக்கிறது என்கின்ற சரியான முடிவுக்கு வரலாம்.

ஒருவேளை இந்த வார்த்தையின் மொழிபெயர்பை ஒருவர் ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், **உபாகமம் 14:26–ம்** வசனம் இந்த பானத்தை அருந்தலாம் என்று ஒருக்காலும் சொல்லவில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். மாறாக, கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவதற்கு நீண்ட தூரம் எப்படி பயணப்பட்டு செல்லவேண்டுமென கூறுகிறது. காணிக்கை செலுத்த நீண்ட தூரம் பயணம் செல்லும்போது மிருகங்களையும், தானியங்களையும், திராட்ச ரசத்தையும் எடுத்துக்கொண்டு போவதற்கு பதிலாக

பணத்தை எடுத்துக்கொண்டு செல்லுமாறு மோசே அறிவுறுத்துகிறார். சென்றடைந்த பிறகு அவர்கள் காணிக்கைக்குத் தேவையானவற்றை வாங்கிக்கொள்ள வேண்டும். பலியிடப்பட்ட மிருகத்தை அவர்கள் புசிக்கலாம், ஆனால் பானபலியை தரையில் ஊற்றிவிட வேண்டும் என சொல்லப்பட்டது. **"காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடுத்த பானபலி பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானப்பலியாக வார்க்கப்படக்கடவது" (எண்ணாகமம் 28:7)**.

## கடைசி விருந்து பற்றி என்ன?

இயேசு திராட்ச ரசத்தை எல்லாருடனும் பகிர்ந்து கொண்டார், மேலும் அது அவருடைய சுத்திகரிக்கும் இரத்தமாக அடையாளம் படுத்தப்படுகிறது. அப்படி இருக்கும் பொழுது சிறிளவு மது அருந்துவது அதுவும் எப்பொழுதாகிலும் ஒருமுறை அருந்தினால் அதனால் தவறென்ன? என சிலர் விவாதிக்கின்றனர். புதிய ஏற்பாட்டின் வித்துகள் கடைசி விருந்தின் திராட்சரசத்தினால் வளர்க்கப்பட்டது என்பதுதான் சரி. இயேசு கடைசி விருந்தின்போது திராட்ச ரசத்தை பயன்படுத்தினார் என்பது தர்க்கத்துக்குறியதல்ல, ஆனால் அவர் உபயோகித்தது புளிப்பேற்றப்பட்ட திராட்ச ரசம் என்று சொல்வது தவறாகும்.

**“இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழ ரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதைப்பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.” (மத்தேயு 26:28, 29).** இயேசு தம் மக்களுடன் அவர் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கைக்கு அத்தாட்சியாக புதிய திராட்ச ரசத்தை அடையாளமாக பயன்படுத்துகிறார். இயேசு திராட்ச இரசத்தை “திராட்சப்பழ ரசம்” என்றழைக்கிறார். எப்படியாயினும் திராட்சரசம் நொதிக்கவைக்கப்படும் போது, அது பசுவிலிருந்து பெறப்படும் தயிர்போல, அதனை புதிய பழரசம் என்றழைக்க முடியாது.

தொடர்ந்து, பஸ்கா பண்டிகையின் அப்பம் புளிப்பிடப்படாததாக இருக்கவேண்டும் என்பதை நாம் அறிவோம் (**யாத்திராகமம் 12:19**). நொதிக்க வைத்தல் என்பது புளிப்பிடப்படும் செயலுக்கு ஒத்ததுதான்! அப்பம் பாவத்துக்கு அடையாளமான புளிப்பு ஏற்படாமல் இருக்குமானால், இயேசுவின் இரத்தத்துக்கு அடையாளமாக திராட்சரசம் இருக்குமெனில் இயேசு தன் கடைசிப் போஜனத்தில் பயன்படுத்திய திராட்சரசம் ஆல்கஹாலின் விஷத்தன்மை அற்றதாயிருந்திருக்கும். இயேசுவுடைய சுத்தமான மாசற்ற இரத்தத்தை

கெட்டுப்போன, அழுகிய பழைய திராட்ச ரசத்துக்கு அடையாளப்படுத்திச் சொல்லவே முடியாது.

இயேசு தன்னுடைய தூய்மையான போதனைகளை முழுமையான புதிய திராட்ச ரசத்துக்கு ஒப்பிடுகிறார் (**மத்தேயு 9:17**). உண்மையில், எல்லா தவறான உபதேசங்களும் பாபிலோனின் புளித்த மதுபானத்துக்கு ஒப்பாயிருக்கிறது! பாபிலோன் என்பது ஓர் இடம், அந்த இடத்தில்தான் "**பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறி கொண்டிருந்தார்களே**" (**வெளி 17:1**).

வேறொரு உதாரணம், "**தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும்** (பாபிலோனின்) **தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு ...**" (**தானியேல் 1:8**)

## இயேசு மதுபானப்பிரியராயிருந்தாரா?

பரிசேயர் இயேசுவை வெறிக்கொள்பவர் மதுபானப்பிரியன் மற்றும் போஜனப்பிரியன் என்றும் அடிக்கடி குற்றப்படுத்தினர். அதோடு கூட அவரை பிசாசு பிடித்தவன் என்றும் தேவதூஷணம் சொல்லுபவர் என்றும் சொன்னார்கள். அவர் போஜனப்பிரியரல்ல அல்லது பிசாசு பிடித்து தேவதூஷணம் சொல்லுபவரும் அல்ல என்று நாம் அறிவோம்! ஆதலால், இவையெல்லாம்

உண்மையில்லையென்றால், கேள்விக்குறிய மதக்கோட்பாடுகளைக் கொண்ட, இயேசுவுக்கு எதிரிடையாக இருக்கிற குழுவைச்சார்ந்த பரிசேயர் சொல்வதினால் நமது கர்த்தரை ஒரு குடிகாரன் என்று எப்படி நாம் எடுத்துக் கொள்ள முடியும்?

நசரேயனாக வாழ்ந்து, மதுபான வகைகளைத் தள்ளிவைத்து வெறும் வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும் உண்டு, மிக எளிமையாக வாழ்ந்த யோவான்ஸ்நானனுடைய வாழ்க்கையைக் அவருடைய வாழ்க்கைக்கு எதிர்மறையாக அவர்கள் காட்டிக்கொண்டிருந்தார்கள் (**எண்ணாகமம் 6:3; லூக்கா 7:33, 34; 1:15; யோவான் 8:48-52; மாற்கு 2:7; மத்தேயு 3:4**).

இயேசு தாகத்துடன் சிலுவையில் தொங்கியபோது, ரோம போர்ச்சேவர்கள் அவருக்கு புளிப்புள்ள கசப்புக் கலந்த காடியை அவருக்குக் கொடுத்தார்கள். ஆனால் இயேசு அதனை ருசிப்பார்த்து உடனே அது புளிக்க வைக்கப்பட்டது என்பதை உணர்ந்து அதனை குடிக்க மறுத்துவிட்டார். அதீத தாகத்தினால் அவரது உடல் வேதனைப்படுகிற அந்த நேரத்திலும் இயேசு அந்த பானத்தை குடிக்கவில்லையென்றால் சாதாரண வேளைகளில் அவர் எப்படி குடித்திருப்பார் (**மத்தேயு 27:34**)? (மேலும் இந்த முடிவுக்கு அதிக வலுசேர்க்கும் வகையில், நாம் ஏன் குடிக்க வேண்டும்?)

# மதுபானம் : அவமானத்தின் வேதாகம இடம்

மதுபானத்தைக் குறித்த முதல் பதிவு ஆதியாகமத்தில் காணப்படுகிறது; ஜலப்பிரளயத்துக்குப் பிறகு நோவா புளிப்பேறிய திராட்ச ரசத்தை உருவாக்கினான். "**அவன் திராட்ச ரசத்தைக்குடித்து, வெறிக்கொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான்**" (**ஆதியாகமம் 9:21**). நோவா வெறிக்கொண்டு வஸ்திரமில்லாமல் தன் மகன்கள் அவனுடைய அவமானத்தை பார்க்கும்படியாக படுத்திருந்தது ஒரு சோகமான பதிவு. புதிய பானத்தினால் ஏற்பட்ட முதல் அனுபவம் நோவாவின் எதிர்கால சந்ததிக்கு ஒரு மோசமான சாபத்தில் முடிந்தது.

லோத்துவும் குடித்தான்; அதனால் தவறான பாதைக்கு வழிநடத்தப்பட்டு தன்னுடைய மகள்களோடு தகாத உறவு வைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. "**அப்படியே அன்று இரவிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்தார்கள். முத்தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணராதிருந்தான்.**" (**ஆதியாகமம் 19:33**). இந்த உறவின் காரணமாக பிறந்த பிள்ளைகள்தான், தேவ பிள்ளைகளுக்கு எப்போதும் எதிரிகளாயிருந்த மோவாபிய தேசமும், அம்மோன் தேசமும். இன்றைக்கும் இப்படிப்பட்ட மதுபானத்தால் நடைபெறும் பாலியல் குற்றங்களுக்கு

பஞ்சமில்லை – வேசித்தனம், கற்பழிப்பு மற்றும் தகாத உறவுகள் இதில் அடங்கும்.

பிறகு இஸ்ரவேல் புத்திரர் மதுபானம் குடித்து, தங்களை நிர்வாணப்படுத்திக் கொண்டு பொறகன்றுக் குட்டியை தொழுது கொண்ட ஓர் பிரபலமான அனுபவம் ஒன்று இருக்கிறது. இந்த புளிப்பேரிய ‘சபை கூடுகை’ ஒரு பெரிய அழிவில் முடிந்தது. (**யாத்திராகமம் 32:6, 25**).

தாவீதின் மகன் அம்னோன் இன்னொரு குடிகாரனாயிருந்து தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரியாகிய தாமாரை கற்பழித்தான். இந்த மோசமான செயலால் கோபம் கொண்ட அவளுடைய சகோதரன் கைகளில் இவன் குடித்து வெறித்திருக்கும் போது தனது உயிரை இழந்தான். (**2 சாமுவேல் 13:28**).

இதெல்லாம் ஒருசில உதாரணங்கள் தாம். வேதாகமத்தில் இன்னமும் அதிகமான மதுவினால் ஏற்பட்ட மறைமுக தாக்கங்களுக்கு வாசிக்கவும் - **2 சாமுவேல் 13:28, யோபு 1:13-19**. உண்மையில், வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் புளித்த மதுபானத்தின் பதிவுகளை ஒருவர் சீர்தூக்கிப்பார்த்தால், ஒரு உண்மையான கிறிஸ்தவன் ஏன் அதை ஆதரித்து விவாதிக்க வேண்டும் என நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்!

# புளிக்கவைக்கப்பட்ட மதுபானம் கொண்டுவருவது ஐயோ

பொதுவாக ஆங்கில மொழியில் “ஐயோ” என்கின்ற வார்த்தை இப்பொழுது பயனப்படுத்தபடுவதில்லை. இந்த வார்த்தையின் பொருள் மிகுந்த துன்பம் அல்லது துயரம் - துக்கத்தினாலோ பரிதாபத்தினாலோ வருவது. வேதாகமத்தில் இந்த வார்த்தை பலவிதமான இடங்களில் காணப்படுகிறது; மதுபானத்தின் உபயோகமே அடிக்கடி இந்த வார்த்தை பயன்படுத்துவதற்கு காரணமாயிருக்கிறது என்பது ஆச்சரியமல்ல.

- **“சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திரிந்து, இருட்டி போகுமளவும் குடித்துக்கொண்டே இருக்கிறவர்களுக்கு ஐயோ!” (ஏசாயா 5:11).**
- **ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டை? யாருக்கு புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்கும் தானே.” (நீதிமொழிகள் 23:29, 30).**
- **தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர் களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப்**

**பார்க்கும்படிக்கு, அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவர்களுக்கு ஐயோ!" (ஆபகூக் 2:15).**

மது அருந்துதலைக் குறித்து இதைவிட அதிகமான கடிந்து கொளல் கிறிஸ்தவனுக்கு தேவையா? இந்தக் கேள்விகளுக்கு ஒரு பாதுகாப்பான சாதாரணமான ஒரு விதி இதுதான்: "சந்தேகமாயிருக்கும் போது அதை விட்டுவிடு!"

## ஆரோக்கியம் சார்ந்த ஒரு விஷயம்

**"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே: ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."** (1 கொரிந்தியர் 6:20). கல்லீரல் வியாதியிலிருந்து, புண்கள், மன வியாதி, ஏறக்குறைய முடிவில்லாத பிரச்சனைகள் வரை மதுபானம் குடிப்பதனால் வருகின்றன.

மதுபானம் (தானிய வகை மதுவும்) உட்கொள்ளப்படும் போது அது நச்சாக மாறி மத்திய நரம்பு மண்டலத்தை தீவிரமாகத் தாக்குகிறது. மிதமான "சமுதாய குடித்தலும்" மூளை உயிரணுக்களை அழிக்கின்றன என்பதை அநேகர் அறிந்திருக்கின்றனர்.

ஒரு சிறிதளவு விஸ்கியை வாயில் பத்து நிமிட நேரம் வைத்திருந்தால், வாயின் எல்லா பகுதிகளிலும் கொப்புளங்கள் ஏற்படும். அவர்களுக்கு தெரியாமல், தண்ணீர், காடி அல்லது பால் போன்ற

பானங்களை குடிக்கக் கொடுத்தால், அவர்களால் அவைகளுக்குள்ள ஒன்றுக்கொன்று வித்தியாசத்தை காணமுடியாமல் போவதை நீங்கள் பார்க்கலாம். இந்த பரிசோதனை, மதுபானம் எரிச்சலூட்டுவதுமட்டுமல்ல அது போதை பொருளாகவும் இருப்பதை நிச்சயமாகவே நிருபிக்கிறது.

மதுபானத்தை அதிகமாக ஆதரிப்பவர்கள் நேர்மையுடன் ஒன்றை ஒற்றுக் கொள்ள வேண்டும். அதை குடிப்பதினால் நிச்சயமாகவே அவர்கள் தேவனை தங்கள் உடல்ரீதியாக மகிமைப்படுத்துவதில்லை என நான் எண்ணுகிறேன்; அதற்கு பதில் அது உடலையும், உள்ளத்தையும் அழிக்கிறது; இது ஆறாவது கட்டளையை மீறுவதாகும்.

புகைப்பிடித்தல் தவணை முறையில் தற்கொலை செய்வது போல, மதபானமும் இருக்கிறது; இதுவே அமெரிக்காவில் கொலை செய்வதில் முன்னிலைப் பெற்றுள்ளது.

உடலுக்கும் மனதுக்கும் போஷாக்கு தரக்கூடிய ஏறக்குறைய எண்ணற்ற விதமான நல்ல பானங்கள் இருக்கின்றன என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அதனால், இந்த அழிவுத் தரும் பொருளுக்கு அதரவளித்தும் பேசி, தங்கள் ஆரோக்கியம், நற்சாட்சி, குடும்பம் மற்றும் நித்திய ஜீவன் இவைகளை பணயம் வைத்து ஏன் எந்த ஒரு கிறிஸ்தவனும் இதனை விளையாட்டாக எடுத்துக் கொள்ளவேண்டும்?

# பூமியின் மிகக் கொடியப்பொருள்

ஆபிரகாம் லிங்கன் சொன்னார், "மதுபானம் சமுதாயத்தின் புற்றுநோயாக இருந்து சத்துக்களை உரிந்துக் கொண்டு அதன் அழிவுக்கு வழி நடத்துகிறது." இது ஒரு பெரிய துணிகரமான அல்லது ஆச்சரிமான கூற்று அல்ல என்பதை சமுதாயத்திலும், வீதிகளிலும் மற்றும் வீடுகளிலும் மதுபானம் உண்டாக்கும் பெரும் அழிவை காட்டுகிறது. உண்மையில், வேதாகமம் இந்தப் பொருளைக்குறித்து மௌனமாயிருந்தாலும், ஆயிரவருடங்களாக சரித்திரத்தில் பெற்ற அழிவின் பாடங்கள் தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன. ஆனால் வேதாகம வசனங்கள் அதிகமாகவே பேசுகின்றன.

**"ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது, நீ அதைப் பாராதே: அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்: உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப் போலும்**

**இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை: என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணையில்லை: நான் அதைப்பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்.''** (**நீதிமொழிகள் 23:29-35**).

தேவன் தேசத்தை அழிக்க ''திராட்ச ரசத்தால் நிரப்பப்பட்ட ஜாடிகளை'' எளிதில் கிடைக்கும்படி உருவாக்குவதற்காக எரேமியா சொன்னார் (**எரேமியா 13:12-15**). இளைஞர்களையும், சுலபமாய் ஏமாற்றப்படக் கூடிய பிரஜைகளையும் குறிவைத்து விளம்பரம் செய்யும் நம் சொந்த நாட்டில் இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது?

போலியான சந்தோஷத்தைப் பெற மதுபானம் குடிக்கப்படும் நாட்டில் வயதில் மிகச்சிறியவர்களையும் குடிக்கும்படி அது ஊக்கப்படுத்துகிறது என்பது ஆச்சரியத்துக்குறியதா? எங்கும் பரவியிருக்கும் மதுபானத்தின் பயன்பாட்டினால் பெரும் குற்றங்கள் இளம் வாலிபர்கள் மற்றும் சிறுவர்களாலும் கூட நடத்தப்படுகிறது என்பதற்கான ஆணித்தரமான ஆதாரம் இருக்கிறது. (அமெரிக்காவின் உயர்நிலைப்பள்ளிகளில் மட்டும் 33 லட்சம் பிரச்சனை குடிகாரர்கள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?)

திராட்சரசத்தையும், மதுபானத்தையும் குறித்து அபத்தமானதை உரைக்கும் பொய் சொல்லும் கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றி மீகா எச்சரித்தார். (**மீகா 2:11**).

இன்றும் அவர்கள் "மிதமான" மதுபானம் பற்றி போதிக்கிறார்கள்; ஆனால், அடிமைப்படுத்தும் போதைப் பொருட்களால் மிதமான கொள்கையை கடைப்பிடிக்க முடியாது என்பதை வரலாறு காட்டியிருக்கிறது.

## அன்பினால் ஒரு சிக்கல்

**"மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்" (ரோமர் 14:21).** குடிப்பவர்களில் ஏழு பேரில் ஒருவர் பிரச்சனை குடிகாரராகவோ, மதுபான அடிமைகளாகவோ மாறுவதால், சட்டப்பிரகாரமான வேறு எந்த பொருளைக்காட்டிலும் எப்படி நிறையபேர் இடறுகிறதற்கு ஏதுவாயிருக்கிற ஒரு மது ஆலையை கிறிஸ்தவர் ஆதரிக்க முடியும்?

சமுதாய கூடுதலில் குடிக்கின்ற பதினாறு பேரில் ஒருவர் மதுபானத்துக்கு அடிமையாகிறார்கள் என அதிகாரிகள் அறிவர் என்று சிக்சிக்ளர் என்பவர் கூறுகிறார். பறக்கின்ற விமானத்தில் பதினாறில் ஒருமுறை விமான செயலிழப்புக்கு வாய்ப்பிருக்கிறது என்றும் அதனால் உங்கள் வாழ்க்கை முடிந்துவிடும் என்றும் நீங்கள் அறிந்திருந்தால் ஒரு அடி எடுத்து அந்த விமானத்தில் வைப்பீர்களா?

(உண்மையில், முரண்பாடானது; வணிக ரீதியான விமான செயலிழப்பு பத்து லட்சத்தில் ஒன்றுதான் என்று கூறப்படுகிறது. ஆனாலும் இந்த முரண்பாடானவையால் சிலர் விமானத்தில் பயணம் செய்யமாட்டார்கள். ஆனாலும் இதே மக்கள்தான் மதுபானம் அருந்துவார்கள்!)

மற்ற தெரிந்த உண்மையை கருத்தில் கொள்ளுங்கள்: அடுத்த 24 மணிநேரத்தில் மதுபானம் கீழ்காணும் சம்பவங்களுக்கு ஏறக்குறைய பாதிக்கு மேல் காரணமாயிருக்கும்.

√...மனித கொலைகள்

√...பிரதான சாலையில் மரிக்கும் மக்கள்

√...மருத்துவமனையில் சேர்க்கப்படும் மக்கள்

√...சிறைச்சாலையில் அடைக்கப்படும் மக்கள்

√...விதிமீறலினால் கைதாகும் மக்கள்

√...பிறவியிலேயே குறைபாடுடன் பிறக்கும் மக்கள்.

அதோடு கூட, மதுபானம் கால்பங்கு தற்கொலைகளுக்குக் காரணம் என்பதையும் சொல்ல வேண்டும்.

இந்த அச்சுறுத்தும் புள்ளி விவரங்களை அறிந்து நன்றாக யோசிக்கக் கூடிய பிரஜைகள், அதிலும் முக்கியமாக கிறிஸ்தவர்கள் மதுபானம் தொடுகின்ற கலாச்சாரத்தில் அலையலையான துன்பங்களைக் கொடுப்பதால் அப்படிப்பட்ட போதையை தவிர்ப்பதற்கு மெய்யான ஆழமான நம்பிக்கைக் கொள்ளுவர் என்பது மிகத் தெளிவாகிறது. நாம் உண்மையில் நமது சகோதரரையும், தேவனையும் நேசிப்போமெனில் நாம் எப்படி மதுபானம் எந்த

அளவும் அருந்துவதை, ஆதரிக்கமுடியும்? ஒரு சகோதரனுக்கு இடறலுண்டாக்குவதாயிருந்தால் மாம்சம் புசிக்கிறதையோ, மதுபானம் பண்ணுவதையோ மற்றெதையும் செய்வதையோ செய்யாமலிருப்பது நல்லது என பவுல் சொல்லுகிறார் (**ரோமர் 14:21**). ஏராளமான மதுபானப் பிரியர்கள் போதையிலிருந்து விடுபடுவதற்கு பிரயத்தனம் பண்ணும்போது, அவர்கள் மறுபடியும் இடறிவிழுவதற்கு, நம்முடைய உதாரணத்துவத்தில் உறுதியற்றவர்களாய் இருப்பதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கக்கூடாது.

## சோதனையை வரவேற்றல்

**“ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்”** (**யாக்கோபு 4:7**). சிறிதளவு மதுபானம் அருந்தினாலும், அது எதிர்ப்புத் தன்மையை குறைக்கிறது மற்றும் பொதுவான மனவலிமையையும் பலஹீனப்படுத்துகிறது என்பது நன்றாகவே பதிவு செய்யப்பட்ட உண்மை.

சாதாரணமாக சொன்னால்; அது ஒரு கிறிஸ்தவனின் சோதனையை மேற்கொள்ளும் முடிவை குறைக்கிறது. எந்த கிறிஸ்தவனும் பிசாசு அவர்களை சுலபமாக பிடிப்பதற்கு ஏன் வழிவகுக்க வேண்டும்? பல ஆண்களும் பெண்களும் இரவில் ஒருசில கோப்பைகள் மது அல்லது பீர்பானத்தால்

குளிப்பாட்டப்பட்டு காலையில் எழும்பும் போது அவர்கள் ஏழாம் கற்பனைக்கு எதிராக நடந்து அவர்களுடைய வாழ்க்கையில் பெரும் கறைபடிந்து நல்மரியாதையை இழந்துப்போயிருப்பதை உணர்கின்றனர்.

அதனால்தான் பேதுரு எச்சரிக்கிறார், **"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்: ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்."** (1 **பேதுரு 5:8**). பிசாசானவன் ஏற்கனவே நம்மீது கண்ணோக்கமாயிருக்கிறான். தேவன் அளித்திருக்கும் எதிர்ப்பு சக்தியை மதுபானம் மூலமாக நீர்த்துப்போக வைத்து பிசாசின் வேலையை நாம் சுலபமாக்கி விடக்கூடாது.

இயேசு சிலுவையில் தொங்கும் வேளையில் தாகமாயிருந்தாலும் அவருக்கு அளிக்கப்பட்ட மதுபானத்தை அவர் அருந்த மறுத்துவிட்டார் என்பதை எண்ணிப்பாருங்கள். **"கசப்புக்கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள் அவர் அதை ருசிப்பார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார்"** (**மத்தேயு 27:34**). உலகத்தின் மீட்பு ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில், ஒரு வாய்நிறை மதுபானம் அருந்தி, அச்செயல் அவர் நமக்காக படும் பாட்டின் துன்பத்தை சகிக்கக்கூடிய பெலன் தரும் என்றாலும், அவருடைய நியாயத்தீர்ப்பினை செயலிழக்க வைக்கும் ஆபத்தை அவர்

மேற்கொள்ளமாட்டார். நம்மிடமிருந்து அதைவிட குறைவாக அவர் எதிர்பார்ப்பாரா?

## கெடுக்கப்படும் சாட்சியங்கள்

கனடாவைச் சேர்ந்த பெரிய மருத்துவர் சர் வில்லியம் ஆஸ்லர் என்பவர் ஒருநாள் மதுபானம் குறித்து உரையாற்றிக் கொண்டிருந்தார். ஒரு மாணவன் கேட்டான், "மதுபானம் சில வேலைகளை நன்றாக செய்யவைக்கிறது என்பது உண்மையா,"

"இல்லை" சர் வில்லியம் பதிலளித்தார். "அவைகளை மோசமாக செய்ததற்கு அவர்களை அது குறைவாக அவமானப்பட வைக்கிறது.

மதுபானம் குடிக்கம் கிறிஸ்தவர்கள், வெளி உலகத்திற்கும், அதே போல சபையில் உள்ளவர்களுக்கும் தங்கள் சாட்சியங்களை கெடுத்திருக்கிறார்கள். இந்த சமரசம் செய்யப்பட்ட சாட்சியங்களால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் தாம்.

அவர்களுடைய தாயார்களோ, தந்தையரோ ஜெபம் செய்துவிட்டு பிறகு பீர்பானம் அருந்துவதை பார்க்கும்போது சிறுபிள்ளைகளுக்கு நிச்சயமாகவே அது குழப்பத்தை கொடுக்கும். இயேசு இந்த கபட நாடகத்தை கடின வார்த்தைகளுடன் கண்டிக்கிறார். **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி**

**சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்''** (மத்தேயு 18:6).

ஒரு ஏக்கமுள்ள தகப்பன் அவருடைய போதகரை அணுகி சொன்னார், ''போதகரே, குடியைப்பற்றி என் மகனிடம் பேசுங்கள், நேற்று இரவு அதிகமாய் குடித்துவிட்டு எழுந்திருக்ககூட முடியாமல் தாறுமாறாக தரையில் விழுந்துக்கிடந்தான். அவனுடைய தாயார் மீதமான இரவு முழுவதும் அழுது கொண்டிருந்தாள்.''

''உங்கள் மகனிடம் நீங்களே ஏன் பேசக்கூடாது?'' போதகர் கேள்வி கேட்டார்.

ஆனால் தகப்பன் சொன்னார், ''போதகரே, என் மகனிடம் என்னால் பேச முடியாது, ஏனென்றால் என்னைத்தான் குறை சொல்ல வேண்டும். அவன் பெரியவனாக இருக்க வேண்டும் என்று நானே முதல் குவளை சாராயத்தை அவனுக்கு ஊற்றிக் கொடுத்தேன். அவன் இவ்வளவு பெரிய குடிகாரன் ஆவான் என கனவிலும் நான் நினைக்கவில்லை. தயவு செய்து என் மகனிடம் பேசுங்கள் என்னால் அவனிடம் பேசமுடியாது.''

இதே போலத்தான் இந்த நாட்டின் அநேக தகப்பன்களும் தாய்மார்களும் இப்படிப்பட்ட ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள் என்பது ஒரு சோகமான உண்மை.

நாம் இதற்காகத்தான் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் **''ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்...அப்பொழுது, நான் உங்களை**

**ஏற்றுக்கொள்வேன்..."** (2 **கொரிந்தியர் 6:17**). ஆனால் ஒரு கிறிஸ்தவன் குடிக்க ஆரம்பிக்கும்பொழுது, உலகத்தின் காரியங்களுக்கு தாங்கள் தனித்திருக்கவில்லை எனக் காட்டுகிறார்கள்.

அநேக கிறிஸ்தவர்கள் தேவன் தங்களை பெரிய காரியங்களைச் செய்வதற்கு ஏன் பயன்படுத்துவதில்லை என அங்கலாயிக்கின்றனர். தேவன் உலகத்தோடு சமரசம் செய்துகொள்ளும் கிறிஸ்தவர்களை பெரிய வேலைகளைச் செய்யப்பயன்படுத்துவதில்லை. அப்படிப்பட்ட பெரிய ஏவல்களைச் செய்ய சுத்தமான பாண்டங்களையே உபயோகப்படுத்துகிறார்.

## பெந்தெகொஸ்தே நாளில் மதுபானம்

பெந்தேகொஸ்தே நாளில், சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட போது அதைப் பார்த்தவர்கள், **"இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்கள்..."** (**அப்போஸ்தலர் 2:13**) என்று சொன்னார்கள். இங்கு பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை குளுக்கோஸ், அதன் பொருள் ஒன்று புதிய புளிக்கவைக்கப்படாத திராட்சரசம் அல்லது ஒரு இனிப்பு நிறைந்த கொதிக்கவைக்கப்பட்ட ஆல்கஹால் கலக்காத திராட்சை பழச்சாறு. பார்வையாளர்களாகிய, இவர்கள் பக்தியுள்ள சீஷர்களைப் பார்த்து, "இவர்கள் திராட்சரசத்தினால் நிறைந்திருக்கிறார்கள்" என்று கேலி பேசினர். இந்தக் கேலியே சீஷர்கள் மதுபானத்தை அவர்களிடமிருந்து

விலக்கிவைத்தார்கள் எனக்காட்டுகிறது. அவர்களுடைய குறிப்பிட்ட அந்த உதாரணத்தை நாம் பின்பற்றாதிருப்பது எப்படி?

## வயிற்றிற்காக கொஞ்சம்?

பவுலும் தீமோத்தேயுவிடம் சொல்லுகிறார், **"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்."** (**1தீமோத்தேயு 5:23**). பவுல் தீமோத்தேயுக்கு மதுபானத்தை சிபாரிசு செய்வதாக பலபேர் பாவிக்கின்றனர். அநேக காரணங்களுக்காக அது தவறான அனுமானம் என்பது தெளிவு: முதலாவது, ஓய்நோஸ் என்கின்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது மற்றும், ஏற்கனவே நாம் படித்ததை போல அது புளிக்கவைக்கப்பட்ட அல்லது புளிக்கவைக்கப்படாத திராட்சரசத்தை குறிக்கிறது. அதோடு கூட, பழங்கால உலகில் மருந்தின் தன்மைக்காக புளிக்கவைக்கப்படாத திராட்சரசத்தை பயன்படுத்தினார்கள் என்கின்ற குறிப்பு கொடுக்கப்படுகிறது. உதாரணத்திற்கு, ஏத்தினியஸ் (கி.பி.280) என்பவர் வயிற்று உபாதைகளுக்கு புளிக்காத திராட்சரசத்தை பயன்படுத்த சொன்னார்.

தண்ணீரை மட்டும் குடிக்கின்ற ஒரு நசரேயனாக தீமோத்தேயு வாழ்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும். திராட்சரசம் உடலுக்கு நன்மை பயக்கும் என்பதால் கொஞ்சம் திராட்சரசம் அருந்த வேண்டுமென

பவுல் சொல்கிறார் - தீமோத்தேயு அதனை விலக்கியிருந்ததால் கொஞ்சம் புதிய திராட்சரசத்தை பருகுதல் அவசியம் என ஊக்குவிக்கப்பட வேண்டும் என அவர் புதிய திராட்சரசம் அருந்தவேண்டுமென பவுல் கூறுகிறார். நொதிக்கவைக்கப்பட்ட திராட்சரசம் வயிற்றுப்புண்ணை அதிகமாக்கும். பவுல் ஒருபோதும் வயிற்று உபாதைகளுக்கு பழைய திராட்சரசத்தை சிபாரிசு செய்திருக்கமாட்டார்.

இதற்கு முன்பதாக இதே நிருபத்தில் பவுல், கண்கணியானவன் மதுபானப்பிரியனாய் இருக்கக் கூடாது என தீமோத்தேயுக்கு அறிவுறுத்துகிறார். (1 **திமோத்தேயு 3:2, 3**). இதே நிருபத்தில் இதற்கு முன் உதவிக்காரர் மதுபானப்பிரியராய் இருக்கக்கூடாது என்று கூறுவதால் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு மதுபான வகைகளை அருந்தலாம் என ஊக்கப்படுத்தியிருக்க முடியாது (1 **தீமோத்தேயு 3:8**), இது அடுத்த தலைப்புக்கு நம்மை வழிநடத்துகிறது.

## மற்ற மருத்துவப்பயன்

**“மடிந்து போகிறவனுக்கு மதுபானத்தையும், மனகசந்தவர்களுக்குத் திராட்சரசத்தையும் கொடுங்கள்” (நீதிமொழிகள் 31:6)**. இந்த வசனம் “மடிந்து போகிறவர்களுக்கும்” (ஓபெட்), “மனங்கசந்தவர்களுக்கும்” சொல்லப்படுகிறது (மாரய் நப்பேஷ்). எபிரெய பாஷையில் இந்தப் பதங்கள் ஆற்றெண்ணா துயரத்தில் இருப்பவர்களையும்,

நம்பிக்கையற்ற சூழ்நிலையில் இருக்கிறவர்களையும் குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், இது ஒருவர் வலிமிகுந்த வேதனையில் மரித்துக்கொண்டிருக்கும் சூழ்நிலையை விவரிக்கின்றது. இது யூதர்களால் பின்பற்றப்பட்டது, அதனால் தான் இயேசு சிலுவையில் இருந்த போது **"வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை" (மாற்கு 15:23)** கொடுத்தார்கள், ஆனால் அவர் அதை குடிக்க மறுத்துவிட்டார். இந்தப்பகுதி, மதுபானத்தின் பொதுவான உபயோகத்தை அனுமதிக்காமல் மரிக்கும் தருவாயில் அவதிப்படுவோருக்கு மயக்க மருந்து போல உபயோகிக்க அனுமதிக்கிறது.

## மிதமாகக் குடித்தல்

**"அந்தப்படியே, உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும்" (1தீமோத்தேயு 3:8).**

மேற்போக்காக பார்க்கும் போது இந்த வசனம் கொஞ்சமாய் குடிப்பதை ஏற்றுக்கொள்வதைப்போல் தெரிந்தாலும், நாம் ஒன்றை ஞாபகத்தில் கொள்ளவேண்டும் வேதாகம சூழ்நிலையில் தேவன் நல்லது என்று காணப்படுவதை மிதமாக பயன்படுத்த வேண்டும் என அனுமதிக்கிறார்; தீயது எனக்காணப்படுவதை முற்றிலுமாக நிராகரிக்க

வேண்டுமென்கிறார். இந்த புரிதலுடன், பவுல் உதவிக்காரர் நல்ல புளிக்காத திராட்சரசத்தை மிதமாக பயன்படுத்த வேண்டும் என புத்தி சொல்லுகிறார் எனகின்ற நியாயமான முடிவுக்கு வரலாம். நல்லவற்றை மிதமாய் பயன்படுத்துவது என்பதை அநேக வேதாகம பகுதிகள் ஆதரிக்கின்றன. தேன் ஆரோக்கியமானது, இயற்கை உணவு, அதுவும் மிதமாகத்தான் உண்ணப்பட வேண்டும்: **"தேனை மிகுதியாய் உண்பது நல்லதல்ல.."** (**நீதிமொழிகள் 25:27**).

பெருந்தீனி, குடித்தாலும் சரி, உண்டாலும் சரி, நல்ல பொருட்களாயிருந்தாலும் சரி மிதமிஞ்சி எடுப்பதை வேதாகமம் கண்டிக்கிறது (**உபாகமம் 21:20, நீதிமொழிகள் 23:21**) மற்றும் இந்த பெருந்திண்டியே முதன்மையான பாவமாக இருந்து மக்கள் ஜலப்பிரளயத்தினால் அழிவதற்கு காரணமாயிருந்தது என இயேசு வர்ணிக்கிறார். (**மத்தேயு 24:38**). ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் அளவுக்கு மிஞ்சிப் புசித்தலும் குடித்தலும் மிகச் சாதாரணமாகக் காணப்பட்டது. தொடர்ந்து நாம் நினைவில் கொள்ள வேண்டியது, விசுவாசிகள் வீடுகளை சந்திப்பது உதவிக்காரர்களின் கடமைகளில் ஒன்று, இப்பொழுது பொதுவாக இருப்பது போல, விருந்தாளிகள் திராட்ச ரசம் குடிக்கக் கொடுக்கப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் பெருந்தீனிகாரர்கள் என்கின்ற பெயர் வரக்கூடாது என்பதற்காகவே, உதவிக்காரர்கள் திராட்ச ரசம் குடிப்பதில் மிதமான போக்கை கடைபிடித்தார்கள்.

அதனால், இந்த வசனத்தின் அதிக நம்பத்தகுந்த அர்த்தம், உதவிக்காரர் புளிப்பேற்றப்படாத திராட்சரசத்தை அதிகமாக அருந்துவதை பவுல் விலக்கி வைக்கிறார்.

பவுல் “துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிக்கொள்ளாமல், ஆவியினால் நிறைந்த” **என்று பவுல் சொல்லும்போது,** சிலர் இந்த வசனம் அதிகமாகக் குடிக்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறது என்று நினைத்திருக்கிறார்கள், ஆனால் வெறிக்கொள்ளுதல் என்கின்ற வார்த்தை கிரேக்க மொழியில் அஸோட்டியா என்று சொல்லப்படுகிறது; அது கலகம் அல்லது கலவர வாழ்க்கை என மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. (**எபேசியர் 5:18, 1பேதுரு 4:4, லூக்கா 15:13**). டார்பி-யின் பதிப்பு ஆங்கிலத்தில் இவ்வாறு மொழிபெயர்க்கிறது; **“துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான துஷ்பிரயோகம் செய்யாமல், ஆவியில் நிறைந்து”** (எபேசியர் 5:18). தேவ ஆவியினால் நிரப்பப்பட்ட புனிதமான பாத்திரங்களாக திகழ்வதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## ஆசாரியர் மற்றும் ராஜாக்களின் ராஜ்யம்

நவீன கிறிஸ்தவர்கள் மதுபானத்தை விலக்கிவைக்க வேண்டும் என்பதற்கு கொடுக்கப்படும் இன்னுமொரு பலமான அத்தாட்சி, நம்முடைய ராஜரீக மற்றும் ஆவிக்குறிய மார்க்கம்

சார்ந்த சந்ததியாகும். வேதாகமம் சொல்வது போல, மதுபானத்தைக் கடந்த காலத்தில் பயன்படுத்தியவர்களுக்கு அது கொடுத்த தாக்கத்தையும் சோகத்தையும் கருத்தில் கொண்டால் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் வேதவசனங்கள் நிச்சயமாகவே நம்முடைய இருதயத்தில் ஒரு பெரிய சக்திவாய்ந்த தாக்கத்தை உருவாக்கும்:

- ✓ **யாத்திராகமம் 19:6 - "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியாயும் இருப்பீர்கள்"**
- ✓ **1 பேதுரு 2:9 – "நீங்களோ - தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."**

இந்த ராஜரீக ஆசாரியராக இருந்தவர்களை எப்படி மதுபானம் பாதித்திருக்கிறது? இதை கருத்தில் கொள்ளுங்கள்:

- ✓ **லேவியராகமம் 10:9,10 – "நீயும் உன்னோடு கூட உன் குமாரரும் சாகாதிருக்கவேண்டுமானால், ஆசாரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கிற போது, திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்க வேண்டாம்". பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும், தீட்டுள்ளதற்கும் தீட்டில்லாததற்கும், வித்தியாசம் பண்ணும்படிக்கும்,"**

✓ **நீதிமொழிகள் 31:4 – "திராட்சரசம் குடிப்பது ராஜாக்களுக்குத் தகுதியல்ல; லேமுவேலே, அது ராஜாக்களுக்கு தகுதியல்ல; மதுபானம் பிரபுக்களுக்குத் தகுதியல்ல."**

குடித்து வெறித்திருந்த காரணத்தினால் அவனுடைய தீர்மானிக்கும் திறன் மங்கிப்போனதால் பெனதாத் ராஜா ஒரு பெரிய யுத்தத்தில் தோற்றுப்போனான். **"பெனதாத்தும், அவனுக்கு உதவியாக வந்த முப்பத்திரண்டு ராஜாக்களாகிய மற்ற ராஜாக்களும், கூடாரங்களில் குடித்து வெறி கொண்டிருந்தார்கள்"** (1 **இராஜாக்கள் 20:16**). கேலிக்குறிய கட்டளை ஒன்றை அவன் உளறினான்; **"அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டு வந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள் அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டு வந்தாலும் அவர்களை உயிரோடே பிடியுங்கள்"** (1 **இராஜாக்கள் 20:18**).

இதற்குப் பிறகு பாபிலோனிய ராஜா பெல்ஷாத்சார் அதிகமாக குடித்திருந்ததினால் அவன் கொல்லப்பட்டான் - புளித்த திராட்சரசத்தை, தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பரிசுத்த பொற்பாத்திரங்களில் நிரப்பினான் (**தானியேல் 5:2-5**).

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பரிசுத்த பாத்திரங்களாக இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். **"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியில் நிறைந்து"** (**எபேசியர் 5:18**) இதைவிட அதிகமாக வேதாகமம் விளக்க வேண்டுமா?

## சுருக்கவுரை

சற்றே நிதானித்துப் புரிந்து கொண்டால், 4,300 வருடங்களுக்குப் பிறகும் நோவாவின் பாவம் இன்றைக்கும் குடும்பங்களை தடுமாற வைத்துக் கொண்டிருப்பது தெளிவாய் தெரிகிறது. நாம் ஒன்றையும் கற்றுக்கொள்ளவில்லையா? மிதமாகக் குடிப்பது என்பது தேவனுடைய பதில் அல்ல; மாறாக அதிலிருந்து முழுமையாக விலகியிருப்பதே ஆகும். குடிகாரர் ஒவ்வொருவரும் அவனுடைய அல்லது அவளுடைய அழிவின் பாதையை "மிதமான" குடியில்தான் ஆரம்பிக்கிறார்கள். முதல் படியாகிய கொஞ்சமாய் மதுபானம் அருந்தலாம் என்கின்ற போதனையை சபையானது ஒரு போதும் பொறுத்துக் கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ கூடாது. மாறாக, இயேசு வார்த்தையிலிருந்து மாம்சமாகி நம்மோடு ஜீவிக்க வந்தார் என்பதை அறிந்து சபையானது தேவ வார்த்தையை சரியானபடி நிலை நிறுத்த வேண்டும்.

மதுபானத்தைக் குறித்த தேவனுடைய நிலைப்பாடு இப்போது மட்டுமல்ல எப்போதும் தெளிவாயிருக்கிறது. மதுபானம் பரிசுத்த தன்மையற்றது மற்றும் அசுத்தமானது. உலகத்தின் மதுபானத்தில் பங்கெடுப்பது என்பது தேவனுடைய உயர்ந்த மதிப்பை குலைக்கின்ற செயலாகும்.

உங்களுக்கு மதுபானத்தைக் குறித்தப் பிரச்சனை இருக்குமேயானால், "அமேசிங் ஃ பேக்ட்ஸ்'ஐ அணுகி மதுபானம் மற்றும் கிறிஸ்தவன் பற்றி இலவச பிரதிகளை கேட்டுப்பெறலாம். தேவ

வல்லமையினால் ஆயிரக்கணக்கானோர் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களிலிருந்து விடுதலைப் பெற்றிருப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம்.!

**"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36).**

**டக் பேட்செலர்**

AMAZING FACTS

India

# அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம் உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும்
இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள்
எதிர்காலத்தை தைரியத்துடனும்
நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே
எங்களை சந்திக்கவும்.

AMAZING FACTS
India

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்



**BOOKSTORE.AFTV.IN**ற்கு வருகைத் தரவும்.

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

இன்னும் அதிகமான **இலவச**

**டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.**




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

AMAZING FACTS
India
Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034
www.AmazingFactsIndia.org